12.04.2023
O.S.No. 176/2020

வா. சா. 1 தங்கராஜ் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

தாவா 1ம் இலக்க சொத்தின் அடங்கலையோ, கிஸ்தி ரசீதோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் லக்க சொத்தில் வருமானம் வராத காரணத்தினால் இந்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, கிஸ்து மாமனார்தான் செலுத்தி வந்தார். எனக்கு இரண்டு பிள்ளைகள், 1ம் பிரதிவாதிக்கு 4 பிள்ளைகள் உள்ளனர். வாதிகளின் மற்ற சகோதரிகளுக்கு குழந்தைகள் உள்ளது என்றால் சரி. 1ம் லக்க சொத்து பூர்வீக சொத்து என்று சொல்லிதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. கூட்டு குடும்ப சொத்தாக இருக்கும்பட்சத்தில் வாதி மற்றும் பிரதிவாதிகளின் வாரிசுகளை பார்ட்டியாக சேர்க்கவில்லை என்றால் அது அவர்களுடைய விருப்பம். என்னுடைய மாமனார், கருப்பையா தேவர் என்வரிடம் வேலை பார்த்து வந்தார், மேலும் அவருடைய சொற்ப வருமானத்தில்தான் 5 பெண் மக்களுக்கும் திருமணம் செய்து வைத்தார் என்றும், நான் சொல்வதுபோல் மிதமிஞ்சிய வருமானம் இல்லை என்றால் சரியல்ல. பூர்விக சொத்திலிருந்து வந்த வருமானத்தையும், கணக்கராக வேலை பார்த்து வந்த வருமானத்தையும் கொண்டுதான் சொத்துக்கள் வாங்கப்பட்டது. 2010ம் வருடம் ஈட்டிய வருமானத்திற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. 1ம் இலக்க சொத்து, மாமனாரின் சகோதரர்களுக்கு பாகம் பிரிப்பதற்கு முன்பாகவே, என்னுடைய மாமனார் பெயரில் 2ம் லக்க சொத்து வாங்கப்பட்டதா என்றால் இல்லை. 1ம் லக்க சொத்து பாகம் பிரிப்பதற்கு முன்னால் அதைப்பற்றி சங்கதிகள் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1ம் இலக்க சொத்தை பிரிக்கும் போது மாமனாரின் சகோதரர்களுக்கு இந்த சொத்துக்கள் பற்றி என்ன ஆட்சேபணை உள்ளது என்று வழக்கு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் 4 பேரையும் வழக்கு தரப்பினராக சேர்த்துள்ளோம். என்னுடைய மாமனாருக்கு 1962லேயே திருமணம் நடந்தது என்றும், 1963ம் ஆண்டிலேயே 1ம் பிரதிவாதி பிறந்துவிட்டார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய சகோதரிக்கு சீர், மற்றும் நகைகள் போட்டுதான் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி, யாரிடமிருந்து 3 லக்க சொத்தில் 2,3 4 அயிட்ட சொத்துக்கள் எவ்வளவு தொகைக்கு கிரையம் பெற்றார் என்றால் பூவண்அடைக்கன் என்பவரிடமிருந்தும், இன்னொரு சொத்து பச்சை அம்பலம் என்பவரிடமிருந்தும், மற்றொரு சொத்து குல்கருணை என்பவரிடமிருந்தும் வாங்கப்பட்டது. அதில் எவ்வளவு கிரையத்தொகை என்பது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. வாடகை ஒப்பந்தம் எவ்வளவு ரூபாய் போடப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. வாடகைதாரர்களுக்கு சொத்துக்களில் பங்கு உள்ளது என்று நோட்டீஸ் அனுப்பி உள்ளீர்களா என்றால் அனுப்பி உள்ளோம். 7 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எந்தவித வழக்கறிஞர் நோட்டீசும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. பத்திர அலுவலகத்திலிருந்து எடுத்த சான்றாவணம் அனைத்தும் என்னுடைய மாமனார் இறந்தபிறகுதான் எடுக்கப்பட்டவை என்றால் சரிதான். வாதி தரப்பு தாக்கல் செய்த 1 முதல் 23 ஆவணங்கள் எடுப்பதற்கு முன்பு

அந்த ஆவணங்களை பற்றிய விபரங்களை பற்றி தெரிந்து கொண்டீர்கள் என்றால் கொஞ்ச நாளாக கோபமாக இருந்து போக்குவரத்து இல்லாமல் இருந்தேன், மாமனார் இறந்தபிறகுதான் சென்றேன். வில்லங்க சான்றிதழை பார்த்துதான் நகல் எடுத்தேன். வில்லங்க சான்றிதழை, நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் சம்மந்தமாக, மாமனார் இறந்து போகும்பரை அதுபற்றி எனக்குதெரியாது என்றும், எனது மாமனார் இறந்த பிறகு அசல் ஆவணங்களை எடுத்துக்கொண்டு, அதை வைத்துதான் சான்றிட்ட நகல் பெற்றேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் பெயரில் இருக்கும் சொத்துக்களை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும் அந்த சொத்துக்களை அபகரிக்கும் பொருட்டு வழக்கிற்காக 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்தையும், கூட்டு குடும்ப சொத்தாக காண்பித்து வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மாமனாருக்கு அதிகப்படியான வருமானம் என்றால அவர பெயரில தான் வாங்கியிருக்கவேண்டும் என்றால் இரண்டு பேர் பெயரிலும் தான் கூட்டு குடும்ப வளர்ச்சிக்காக வாங்கினார்கள். மாமனாருடன் பேச்சு வார்த்தை இல்லை என்பதால், இன்றைய தேதிவரை அந்த சொத்துக்களிலிருந்து எந்த ஒரு வருமானத்தையும் அனுபவிக்கவில்லை என்றும், வாதிகள், மற்றும் 3 முதல 5 பிரதிவாதிகளும் அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் சுவாதீனத்திற்கு நாளது தேதிவரை நாங்கள் செல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய மாமனார், வாதிகளுக்கும், சகோதரிகளுக்கும பணபலனாக தலா ரூ.10 லட்சம் பெற்றுக்கொண்டதால்தான் தாவா சொத்துக்களின் பணபலன்களையும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள், வாதிகளுக்கும் அவரது சகோதரிகளுக்கும் எந்தஒரு பாக உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 3 வது லக்கத்தின் 2,3,4 சொத்துக்களும, 10 முதல் 16 சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தனித்த சொத்து என்ற காரணத்தினால், வாதிகளுக்கும் அவர் சகோதரிகளுக்கும் எந்த ஒரு பாகஉரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

S SIVAKADATCHAM

Digitally signed by S SIVAKADATCHAM
Date: 2023.04.12 15:56:13 +0530

Principal District Judge,
Dindigul.